<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 31/2012 நாள்: 08.07.2025 பி.வா.சா.2 – அனந்தமுருகன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை -</u>

1ம் பிரதிவாதி தரப்பில் வாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததால் அவரது தரப்பில் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்கள்.

3, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் தற்போது முன்னிலை ஆகாததால் அவர்கள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u>

என்னுடைய மூத்த சகோதரி சரோஜினியம்மாள் சென்னையில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். இரண்டாவது சகோதரி விஜயலெட்சுமி குன்னத்தூரில் நிரந்தரமாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி இருவரும் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் மூத்தவர்கள் என்று சொன்னால் சரிதான். 3ம் பிரதிவாதி சேலத்தில் வசித்து வருகிறார். அவர் எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இளையவர். முதல் வாதி சரோஜினி M.A.,B.Ed.,படித்துள்ளார். எனது சகோதரி விஜயலெட்சுமி 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். 3ம் வாதி சாவித்திரி படித்துள்ளார். என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி எனக்கு மூத்த அக்கா. அவர்களும் படித்துள்ளார்கள். 3 வாதிகளும் வெளியூரில் தான் வசித்து வருகிறார்கள்

என்றால் சரிதான். 3 வாதிகளும் எனது தாயார் வீட்டிற்கு அவ்வப்போது வந்து உடன் இருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் தாயாரை பார்த்துவிட்டு சென்று விடுவார்கள் என்று கூறுகிறார். எனது தாயார் காங்கேயத்திலும், உடுமலைப்பேட்டையிலும் வசித்து வந்தார். எனது தாயாரின் குடும்ப அட்டை முதலில் காங்கேயம் முகவரியிலும், பின்னிட்டு உடுமலைபேட்டை முகவரியிலும் இருந்தது. எனது தாயார் உடுமலைபேட்டையில் வசித்து வந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் என்னிடம் உள்ளன. எனது தாயாருக்கு 1990ம் ஆண்டு வலது மார்பில் புற்றுநோய் வந்தது. அதனால் மார்பகம் அகற்றப்பட்ட விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாயார் மேற்படி நோய் வாய்பட்ட காலத்தில் அவர் காங்கேயத்தில் வசித்து வந்தார். அவருடன் நான், எனது மனைவி, எனது குழந்தைகள் உடனிருந்தோம். எனது தாயாருக்கு மேற்படி புற்றுநோய்க்கு எந்த மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது என்ற விவரத்தை என்னுடைய எதிர்வழக்குரையிலும், சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு கோவை கே.ஜி. மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. எனது தாயாரை நானும், எனது சகோதரரும் சேர்ந்து தான் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். எனது தாயார் சிகிச்சை பெற்றுக்கொண்டதற்கான ஆவணத்தை இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். சிகிச்சைக்கான ஆவணங்களை எனது தாயாரே அவரது கைவசம் வைத்திருந்தார். எனது தாயாருக்கு 2005ம் ஆண்டு கர்ப்பப்பை புற்றுநோய் வந்தது என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். 2005ம் ஆண்டு மேற்படி புற்றுநோய்க்கு நானும், எனது சகோதரர், எனது மகன்கள், எனது மனைவி ஆகியோர்கள் உடன் இருந்து மருத்துவமனையில் உதவி செய்தோம். எனது தாயார் ஒரு வார காலம் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து கொள்ள இருந்தார்.அறுவை சிகிச்சை செய்து கர்ப்பபை அகற்றப்பட்டது. மேற்படி கர்ப்பபை

அகற்றப்பட்டது தொடர்பான மருத்துவ சிகிச்சை ஆவணங்களை இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1990 முதல் 2005 ம் ஆண்டு வரை எனது தாயார் சிகிச்சைக்காக அவ்வப்போது மருத்துவமனை சென்று வருவது வழக்கம் என்று சொன்னால் சரிதான். 2005ம் ஆண்டு எனது தாயார் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ ஆவணங்களை நான் வாங்கவில்லை. எனது தாயார் கைவசம் வைத்து பராமரித்து வந்தார். மருத்துவமனை மூலமாக மேற்படி எனது தாயார் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு நான் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை. 1990 ம் ஆண்டு எனது தாயாருக்கு ஏற்பட்ட மருத்துவ சிகிச்சைக்கான செலவை எனது தகப்பனார் செய்தார். 1999ல் எனது தந்தையார் காலமானார். எனது தந்தை இறக்கும் வரையில் அவருக்கு எவ்வித உடல்நிலை பாதிப்பும் கிடையாது. 2005ம் ஆண்டிற்கான எனது தாயாரின் மருத்துவ செலவை நான், எனது சகோதரர், எனது மனைவி, எனது மக்கள் செய்தார்கள். தற்போது சாட்சி எனது தாயாரே கைவசம் பணம் வைத்திருந்தார், அவருக்கான வைத்திய செலவை அவரே அப்போது செய்து கொண்டார் என்று கூறுகிறார். எனது தாயார் 31.10.2011 ல் காலமானார். எனது தாயார் காங்கேயம் மருத்துவமனையில் வைத்து காலமானார் என்றால் சரியல்ல, வீட்டில் வைத்து தான் காலமானார் என்று சாட்சி கூறுகிறார். 1ம் பிரதிவாதி குறுக்கு விசாரணையில் எனது தாயார் காங்கேயம் மருத்துவமனையில் வைத்து காலமானார் என்று சொல்லியுள்ளார் என்று சொன்னால் சாட்சி அது பற்றி தெரியாது என்று கூறுகிறார். 1ம் பிரதிவாதியின் வாக்குமூலத்தை நான் மறுத்து ஆட்சேபணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது தாயார் உடல் உடுமலைபேட்டையில் அடக்கம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். 2005ம் ஆண்டிற்கு பிறகும் எனது தாயாருக்கு புற்றுநோயின் தாக்கம் கடுமையாக இருந்தது என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் புற்றுநோயின் காரணமாக தான் இறந்தார் என்றால் சரிதான். எனது தாயார் புற்றுநோயால் காங்கேயம் மருத்துவமனையில்

காலமானார், நான் வழக்கிற்காக உண்மையை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.